Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 396/2022

Deposition of witness for: PW -7

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலமுருகன் | Father/Husband Name | : வீரபுத்திரன் |
| Age | : | Calling | : |
| Date | : 16.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 16day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிகள்ஆஜர்

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது கொட்டாம்பட்டியில் குடியிருந்து கொண்டு மீனாட்சி கபேயில் சர்வராக வேலை செய்து வருகிறேன். கடந்த 29.10.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு குருசாமி மகன் பாலசந்திரனுடன் இரு சக்கர வாகனத்தில் எஸ்சி ஹாஸ்டல் அருகே வந்து கொண்டிருந்தோம். அப்போது அங்கிருந்த கொட்டாம்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் எங்களை நிறுத்தி நான் அந்த ஊர்க்காரர் என்பதனால் அங்கு பிரச்சனை நடந்த விவரம் தெரியுமா என்று எங்களிடம் கேட்டார். நான் அந்த ஊர்க்காரர் என்றாலும், எனக்கு பிரச்சனை குறித்து தெரியாது என்று சொன்னேன். போலீசார் என்னிடம் ஒரு எழுதியிருந்த தாளில் கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2ம் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த 2ம் சாட்சி கையொப்பம் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது )**, அந்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் கையொப்பம் பெற்ற இடத்தில் என்ன பொருட்கள் பார்த்தார்கள், கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு என்னை அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.